செய்தி வெளியீடு எண்: 362 நாள்:01.07.2021

## தொழிலாளர் துறை

# அனைத்து மாநில தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசனை கூட்டம்

அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாராத தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன. இந்த அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாராத தொழிலாளர்களின் பிரச்சனைகளை கண்டறியவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு ஏற்படுத்தவும், தொழிலாளர் – வேலையளிப்பவரிடையே சுமூக தொழில் உறவை ஏற்படுத்தவும், வழிவகைகளை கண்டறியும் நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வெ.கணேசன் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் செயல்படும் முக்கிய தொழிற்சங்கங்களுடன் ஒரு ஆலோசனைக்கூட்டம் 01.07.2021 அன்று காலை 11.30 மணியளவில் சென்னை–6, தொழிலாளர் நல ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் திரு.சி.வெ.கணேசன் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசிய போது கடந்த 10 ஆண்டுகளில் தொழிலாளர்கள் நலன் மற்றும் அவர்களின் சமூகபாதுகாப்பு உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை என்றும், தமிழ்நாட்டில் புதிய ஆட்சி அமைந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு தொழிலாளர் நலனை பாதுகாக்க முன்னுரிமை அளித்து அதற்காக முனைப்புடன் செயல்பட தயாராக உள்ளது என்றும், அந்த தொழிலாளர்களுக்கு அத்தகைய உரிமைகளை நிலைநாட்ட உரிய வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் தெரிவிக்குமாறு அனைத்து மாநில தொழிற்சங்க தலைவர்களையும் கேட்டுக்கொண்டார்.

அதனையடுத்து, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச் செயலாளர் திரு.மு.சண்முகம், ராஜ்யசபா உறுப்பினர் அவர்கள் பேசிய போது, தொழிற்சங்கங்கள் பதிவு செய்வதில் காலதாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும், தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல் சட்டம் தீவிரமாக அமல்படுத்தப்பட வேண்டுமென்றும், குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி குறைந்தபட்ச ஊதியம் வழங்காத நிறுவனங்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் பெற்று தர வேண்டுமென்றும், சம வேலைக்கு சமஊதியம், பிழைப்பூதியம் வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டுமென்றும், தொழிற்சாலைகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும், வேலையாள் இழப்பீடு மற்றும் குறைந்தபட்ச ஊதியம் குறித்த வழக்குகள் தாமதம் ஏற்படுத்தபடாமல் அவற்றில் ஆணைகள் வழங்கப்பட வேண்டுமென்றும், கடந்த 10 ஆண்டுகளில் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவுகள் புதுப்பிக்கப்படாமல் இருக்கும் பயனாளிகளுக்கு ஒருமுறை வாய்ப்பு வழங்கி பதிவை புதுப்பிக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும், மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் எனும் முத்தரப்புக்குழு மூலம் தான் தொழிலாளர் சட்டங்களில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள்,

திருத்தங்கள், கொள்கை முடிவுகள் விவாதித்து முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் உள்ளிட்ட அனைத்து முத்தரப்புக் குழுக்களும் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

மேலும், மத்திய அரசு தொழிலாளர் நல சட்டங்களில் மாற்றம் கொண்டு வந்து 29 தொழிலாளர் நல சட்டங்களை ஒருங்கிணைத்து நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு மாநில விதிகள் இயற்றும் போது அதில் உள்ள பாதகமான இனங்கள் குறித்து விவாதித்து அவற்றை களைய முயற்சிக்கும் நோக்கில் ஒரு முத்தரப்பு ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார். அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியத்தின் மகப்பேறு உதவித் தொகை மற்றும் பிற உதவித்தொகைகள் உயர்த்தப்பட வேண்டுமென்றும், மூடப்பட்ட ஆலைகளில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு புனரமைப்பு நிதி வழங்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பின் (சிஐடியு) மாநில தலைவர் **திரு.ஏ.சௌந்திரராஜன்,** தலைவர் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) அவர்கள் பேசும் போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தொழிலாளர்களை தொழிற்சங்கம் ஆரம்பித்ததற்காக அவர்களை பணிநீக்கம் செய்தும், பல தண்டனைகளை வழங்கியும் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது என்றும், தொழிலாளர் அலுவலர் முன்பு ஏற்றுக்கொண்ட அறிவுரைகளை பின்பற்றாமல் தொழிலாளர்களை பணிநீக்கம் செய்துள்ளதாகவும், தொழிலாளர் துறை இதுகுறித்து தலையிட்டு நிர்வாகத்தை அழைத்து பேசி சுமூக முடிவு எட்டப்பட வேண்டுமென்றும், கடைகள் மற்றும் நிறுவனங்களில் தொடர்ந்து பல மணிநேரம் ஓய்வின்றி நின்று கொண்டே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இருக்கை வசதி செய்து தர வேண்டுமென்றும், புலம்பெயரும் தொழிலாளர்கள் சட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (ஐஎன்டியுசி) சார்பில் மாநில தலைவர் திரு.வி.ஆர்.ஜெகநாதன், தொழிற்சாலைகள் சட்டத்தை முழுமையாகவும், கடுமையாகவும் அமல்படுத்தி தொழிலாளர் நலன் மற்றும் பாதுகாப்புகள் ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார். ஹிந்த் மஸ்தூர் சபாவின் தேசிய தலைவர் திரு.ராஜாஸ்ரீதர் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் அனைவரையும் பதிவு செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார்.

மேலும், இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மற்ற தொழிற்சங்க தலைவர்கள் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர்களின் பங்களிப்புத் தொகை ரூ.50/–ஆகவும், வேலையளிப்பவர் பங்களிப்புத் தொகை ரூ,100/–ஆகவும் உயர்த்தப்பட வேண்டுமென்றும், நலவாரியங்களின் கீழ் செயல்படும் ஓய்வு இல்லங்கள் சீரமைக்கப்பட வேண்டுமென்றும், 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டுமென்றும், டாஸ்மாக் நிறுவனத்தில் ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்றும், தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் தொழிலாளர்களுக்கு அரை சம்பளம் வழங்கப்படுவதாகவும், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்றும், டாஸ்மாக் நிறுவனத்தில் ஊழியர்கள் பணியில் சேரும்போது டெபாசிட் செய்த தொகைக்கு வட்டி வழங்கப்படவில்லை என்றும், டாஸ்மாக்

ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்கப்படவில்லை என்றும், ஏற்கனவே ஓட்டுநர் உரிமங்கள் பெற்ற ஓட்டுநர்களுக்கு நலவாரியத்தில் பதிவு செய்ய வி.ஏ.ஓ சான்றிதழ் பெறப்பட வேண்டுமென்று வலியுறுத்தக் கூடாது என்றும், மேற்படி அனைத்து பிரச்சனைகளிலும் தொழிலாளர் துறை தலையிட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

மேற்படி தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் மற்றும் கருத்துகளுக்கு, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்த போது, தொழிலாளர் துறையை மேலும் சிறப்பாக செயல்படுத்துவதற்கு தொழிற்சங்கங்கள் நல்ல ஆலோசனைகள் வழங்கியுள்ளதாகவும், அவர்கள் கோரிக்கைகளின்படி, வாரியங்களில் பதிவு செய்வதில் உள்ள இடர்பாடுகளும், சட்டங்களை அமல்படுத்துவதிலும், தேங்கியுள்ள வழக்குகளை தீர்த்து வைப்பதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நிலுவையிலுள்ள கேட்பு மனுக்களில் அடுத்த 10 நாட்களில் 50,000 தொழிலாளர்களின் மனுக்கள் தீர்த்து வைக்கப்பட்டு உதவித்தொகை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தொழிற்சங்கங்கள் கோரியவாறு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முத்தரப்பு குழுக்கள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வாரியங்களில் மகப்பேறு உதவித்தொகை மற்றும் பிற உதவி தொகைகள் உயர்த்துவது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இனிவருங்காலங்களில் முத்தரப்பு ஆலோசனைக் கூட்டங்கள் ஆறு மாதங்களுக்கொரு முறை நடத்தப்படும் என்றும், தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் செயல்படும் ஓய்வு இல்லங்கள் புனரமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் திரு.ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் முனைவர் திரு.மா.வள்ளலார், இ.ஆ.ப., தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர் திரு.மு.ரவிச்சந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் மற்றும் அனைத்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**